# வேளாண் குடிச் சமூகக்கட்டமைப்பினுள் வைஷ்ணவ நம்பிக்கைச் செல்வாக்கு: வந்தாறுமூலை ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயத்தை மையப்படுத்திய ஒரு மானுடவியல் ஆய்வு

**சி. கிருபாகரன்[1] ச. சசிதரன்[2]**

[1]Sri Lanka Red Cross Society, Batticaloa, Sri Lanka
[2]Department of Social Sciences, Eastern University of Sri Lanka, Sri Lanka

**சுருக்கம்:** மதத்திற்கும் சமூககட்டமைப்புக்குமான உள்ளார்த்தமான பிணைப்புக்களை உள்ளடக்கிய பார்வை மக்ஸ்வெபர் (Max Weber) காலத்திலிருந்து முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வகையில் மட்டக்களப்பு வந்தாறுமூலை கிராமத்தினுள் ஒரு சமூக அடையாளமாகவும், சமூகக்கடமைப்பாடு, சமூக பிணைப்புகள் ஆகியவற்றன் அடையாளமாகவும் காணப்படுகின்ற விஷ்ணு வழிபாட்டு மரபுகளை விவசாய கட்டமைப்புடன் கொண்டிருக்கத்தக்கதாக தத்துவார்த்த தொடர்புகளை சமூகவியல் மற்றும் மானுடவியல் ரீதியிலும் தேடிப்பார்ப்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். அவையாவன: (i) பொருளாதார நடவடிக்கைகளும் சமயவாழ்க்கைக்குமான தத்துவார்த்தமான பிணைப்புக்களை ஆய்வுமாதிரியாகக்கொண்டு குறிப்பிட்ட கிராமிய சமூகத்தின் சமயவாழ்வியலுக்கு பின்னியாகவுள்ள சமூகவிடயங்களை கண்டறிதல். (ii) பொருளாதார செயற்பாடுகள் எவ்விதம் சமயப்பண்பாட்டு தளங்களில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பது பற்றிய தெளிவினை ஏற்படுத்துதல். மனிதப்பண்பியல் தொடர்பான சமூக ஆய்வு என்பதனால் தர்க்க ஆய்வு முறை பிரதானமாக பின்பற்றப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட குடித்தொகுதியிலிருந்து வாய்மொழிமூலமான திறந்த நேர்காணல் அடிப்படையிலும் ஆய்வுக்கான தரவுகள் திரட்டப்பட்டன. திறந்த நேர்காணலுக்கு அடிப்படையாக ஆய்வாளர்களால் பிரத்தியேகமான ஆய்வு முறைகாணப்பட்டது. குறிப்பாக மக்களின் வாழ்வியல் தளங்களுக்குச்சென்று ஆய்வின் மையவிடயங்கள் பங்குபற்றலூடாக அவதானிக்கப்பட்டன. பிரதானமான ஆய்வு முறைகளாக திறந்த நேர்காணல் முறையும் பங்குபற்றிய அவதானமும் பிரயோகிக்கப்பட்டது. ஓட்டுமொத்தமாக முற்றிலும் விவசாயத்தை ஜீவனோபாயமானதாக கொண்ட குடித்தொகையிலிருந்து சுமார் 100 பேர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். இவர்களில் கமக்கார ஆண்கள், அவர்களின் மனைவிமார், முதியோர், இளைஞர்கள், சிறார்கள் ஆகியோர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர் மடடக்களப்பு பிராந்தியத்துக்குரிய சமூகப்படையாக்கல் வடிவங்களுள் ஒன்றான குடிமுறையின் வியாபகமும் சமயநிலையும் பேணப்படும் வகையிலும் ஆய்வு உருமாதிரி வடிவமைக்கப்பட்டது. இவ்வாய்வின் முடிவுகளாவன: (i) சமயம் அல்லது ஆன்மிகம் என்பவற்றுக்கு அப்பால் ஜீவனோபாயம் சார்ந்த அனுகூலங்களும் விளைவுகளும் பொருளாதார ஸ்த்திரப்பாட்டினை நோக்கிய மானுட உந்துதலுமே இக்கிராமத்தில் விஷ்ணுவழிபாடு மேலோங்கச் செய்துள்ளன. (ii) கிழக்கிலங்கையில் வலுவான பெருந்தெய்வமும் பெண்தெய்வமுமான கண்ணகி அம்மனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலையில் விஷ்ணுவழிபாடு மேலோங்கியுள்ளமையும் ஒரு சுவாரசியமான சமூகவியல் ஆய்வுக்கு வழிவகுக்கின்றது. (iii) வைதீக நிலைப்பட்ட அல்லது பிராமண மயமாக்கப்பட்ட அச்சொட்டான வைஷ்ணவ பாரம்பரியத்திலிருந்து சற்று விலகியதாக ஒருவகையான கிராமிய நிலைப்பட்ட வைஷ்ணவ வழிபாட்டு முறைமைக்கு இக்கிராம சமூகக்கட்டமைப்பு வழிவகுத்துள்ளது. (iv) வேளாண்குடி சமூகத்துக்குரிய பொருள்திரட்டுதல் மீதான பற்றுதியையும் அதற்கான உத்வேகத்தையும் கிராமிய மயமாக்கப்பட்ட வைஷ்ணவ நம்பிக்கையாக நின்று தொழிற்படுகின்றது. (v) முதலாளித்துவத்தின் எழிச்சிக்கு புரட்டஸ்தாந்து சமயத்தின் இறுக்கமான அறநெறிகள் துணை புரிந்துள்ளதாக Max Weber சுட்டிக்காட்டியுள்ளார். அந்தளவுக்கு இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து குறிப்பிட்ட வேளாண்குடி சமூகத்தினுடைய கட்டமைப்பிலும், பொருளாதார கட்டமைப்பிலும், வாழ்வியல் சூழ்நிலைகளும் இதனை சூழ்ந்துள்ள கிராமிய சமூகத்தின் அபிலாசைகளுக்கும் பின்னனியில் கிராமிய நிலைப்படுத்தப்பட்ட வைஷ்ணவ நம்பிக்கை மரபுகள் ஓர் உந்துவிசையாக தொழிற்படுகின்றது எனக்கூறலாம்.